www.padippakam.com

# அகதியான போது ...................



-------------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

## ------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)

**பாகம் -3**

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த கையூம் என்பவர் இக்கிரிகொல்லாவ முஸ்லீம் வித்தியாலயத்தின் அதிபராக இருந்ததுடன்

வடக்கில் இருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டு அந்த ஊரில் தங்கிய மக்களுக்கு அவர் செய்த உதவிகள் அளப்பரியது .

அந்த அதிபருக்காகவே அந்த ஊர் மக்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு பல உதவிகளை செய்து வந்தனர் .ஏற்கனவேகஷ்டத்தில் இருந்த அந்த ஊர் மக்களின் ஒவ்வொருவர் வீட்டிலும் குறைந்தது ஒரு யாழ்ப்பாண ,முல்லைத்தீவு ,மன்னார் ,வவுனியா மாவட்ட இடம் பெயர்ந்த மக்களுக்கு தங்குவதற்கு இடம்

அளித்தனர் ,பல உதவிகளை செய்தனர் .அந்த அதிபரும் ,அந்த ஊர் மக்களும் அகதிகளுக்காக செய்த உதவியை

இலங்கையில் எந்த அமைச்சரும் தெற்கில் உள்ள எந்த ஊர்களும் செய்திருக்காது என்பதை ஆணித்தரமாக

அடித்துச்சொல்ல முடியும் .

இக்கிரி கொல்லாவ பள்ளி வாசலுக்கு பக்கத்தில் அண்மைக்காலம் வரை இருந்து வந்த அகதி முகாம்கள் இதற்கு

சான்று பகரும் .

யாழ்ப்பாணம் ,மன்னார் ,முல்லைத்தீவு மற்றும் வவனியா போன்ற இடங்களிலும் இருந்து இடம்பெயர்ந்த மக்கள்

இக்கிரி கொல்லாவையில் குவிந்து கொண்டிருந்த காலம் அது .ஒரு கட்டத்தில் எந்த வீட்டிலும் இடம் இல்லை என்ற

நிலை காணப்பட்டதால் அகதி முகாம்கள் பள்ளியோடு சேர்த்து உருவாக்கப்பட்டிருந்தன .

அப்போது அந்த இரவு இருட்டினுள் புகுந்து இருந்ததது.....அந்த ஊரில் அப்போது மின்சாரம் இல்லாது இருந்தமையால் எங்கும் இருட்டு மயமாக இருந்தது .தூரத்தே தென்பட்ட பெட்டிக்கடை ஒன்றினதும்,டீ-கடை ஒன்றினதும் பெட்ரோல் மேக்ஸ் வெளிச்சமும் சில வீட்டினும் மின்னிய மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சமும்

படிப்பகம்

www.padippakam.com

இருட்டை சிறிதளவு கண் விழிக்கச்செய்தது .இடையிடையே பிரதான வீதியில் சென்ற பஸ்களினதும் ,மதவாச்சி நோக்கிச்செல்லும் இராணுவ வாகனக்களினதும் வெளிச்சங்கள் வெட்டி வெட்டி மறைந்தன.

அன்று எங்களைப்போல பல குடுபங்கள் வெவ்வேறு இடங்களில் இருந்து வந்து இக்கிரி கொல்லாவ வித்தியாலயத்தில் தங்கி இருந்தன.இரவு சாப்பாடாக பாணும் பருப்பும் அந்த ஊர் மக்களாலும் அந்த பாடசாலை அதிபராலும் தரப்பட்டது.இருந்த பசிக்கு அந்த உணவு மிகவும் ருசியானதாக இருந்ததாக பக்கத்தில் இருந்தவர்கள் முணுமுணு த்துக்கொண்டன்ர் .அதில் உண்மை இல்லாமலும் இல்லை..

அந்த இரவில் தங்குவதற்கு இடம் இல்லாமல் இருந்ததால் அந்த பாடசாலையில் அன்று இரவு கழிந்தது.புதிய ஒரு அனுபவமாக இருந்த அந்த நிகழ்வு,வாழ்க்கையின் கஷ்ட காலத்தில் முதல் அத்தியாயமாக இருக்கும் என்று அப்போது தெரிந்திருக்கவில்லை

மறு தினம் விடித்த போது எனது குடும்பத்துக்கும் இக்கிரிகொல்லாவையில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ள ஜைனுலாப்தீன் என்ற நல்ல மனம் கொண்ட ஒருவரின் வீட்டில் தங்க இடம் கிடைத்தது .அவரது வீட்டில் மன்னாரைச்செர்ந்த இரண்டு இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கும் ,முல்லைதீவைச்சேர்ந்த இரண்டு குடும்பங்களுக்கும் ,எனது உறவினர்களான மூன்று குடும்பங்களுக்கும் தங்கியிருக்க இடம் கொடுத்தார் .பரந்த மனம் கொண்ட அந்த மனிதர் போன்ற பலர் காட்டிய கருணைகளால் பல குமர் பெண்களின் மானம் காக்கப்பட்டன ; பல குடும்பங்களின் கௌரவம் காக்கப்பட்டது .அல்லாஹ் அவர் போன்ற மக்கள் செய்த மறக்க முடியாத அந்த உதவிகளை ஏற்றுக்கொள்வானனாக !

பல இஸ்லாமிய சமூக அமைப்புகள் தம்மால் இயன்ற அளவு உணவுப்பொருட்கள் ,மற்றும் உடைகளை சேகரித்து வந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்து வந்தன .குறிப்பாக ஜமாத்தே இஸ்லாமி செய்த உதவிகள் ,பேருவளையில் இருந்து வந்த பல இஸ்லாமிய அமைப்புகள் செய்த உதவிகள் ஆகியவற்றை இங்கே குறிப்பிட்டாக வேண்டும் .இன்னும் இங்கு பெயர் குறிப்பிடாத பல அமைப்புகள் பல செய்த உதவிகளுக்கு அல்லாஹ் நிச்சயம் கூலி கொடுப்பான் .

இவ்வாறு கஷ்டமான சூழலில் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் இந்நாள் நமது முஸ்லீம் அமைச்சர்கள் நடந்து கொண்ட விதங்கள் பற்றி இங்கு கூற ஆசைப்படுகிறேன் .

இந்நாள் வாலாட்டி அமைச்சரும் ,முஸ்லீம்களின் பெயர் சொல்லும் அமைச்சு ஒன்றின் முன்னாள் அமைச்சருமாக இருந்த அவர் நடந்து கொண்ட விதம் பற்றி இங்கு கூறியாக வேண்டும் .உப்பள ஊரைச்சேர்ந்த ,பேச விட்டால் நன்றாக வாய் கிழிய பேசத்தெரிந்த அந்த அமைச்சர் அகதிகளைப்பார்க்க இக்கிரி கொல்லாவைக்கு வரப்போவதாக அந்த ஊரில் செய்தி பரவிய போது ,இடம் பெயர்ந்த மக்களின் உள்ளங்களில் இனந்தெரியாத சந்தோசம் ..அந்த அமைச்சரை வரவேற்க அந்த ஊரும் கூடி நின்றது .வழமையான இலங்கை அமைச்சர் நேரப்படி பல மணி நேரம் கழித்து பல பஜிரோக்கள் புடை சூழ அவர் வந்த போது எனக்கு பக்கத்தில் நின்றவர்கள் பேசிக்கொண்டது இன்னமும் காதில் கேட்கிறது .

ஒருவர் சொன்னார் ‘அமைச்சர் சாமான்கள் கொண்டு வருவதாக சொன்னார்களே என்ன லாரி ஒன்றையும் காணலையே ’

அடுத்தவர் சொன்னார் பதில் ,

‘அவர் கேஸ் கொண்டு வந்து எல்லா குடும்பத்திக்கும் கேஸ் கொடுக்கப்போகிறார் போல ’

வழமையான பந்தாவில் அவர் பஜிரோவை விட்டு இறங்கிய போது வாலாட்டும் படையணி தீவிரமாக முன்னரண்கள் நோக்கி சென்று அவரை வாய் திறந்து வாலாட்டி ,முப்பத்தி இரண்டு முத்துக்களையும் காட்டி வரவேற்றது ..இலங்கை தேசிய கீதம் தெரியாத அந்த படையணி இலங்கையின் கொடிகளை ஆட்டி அமைச்சரின் தேசிய பற்றுக்கு சாமரம் வீசின.

ஒரு சிலரை அழைத்து என்ன நடந்தது என்று கேட்டுக்கொண்டார்

அவரோடு அழைத்து வந்திருந்த ‘லேக் ஹவுஸ் ’போட்டோ கிராபர்களை அழைத்து

படிப்பகம்

www.padippakam.com

அகதிகளுக்கு இடையில் தன்னை வைத்து போட்டோ எடுக்குமாறு சிக்னல் கொடுத்தார்.கவலை தோய்ந்த முகத்துடன் அவர் போட்டோக்களுக்கு காட்சி அளித்த போது அவர் நிஜமான அரசியல் வாதி என்று செயலில் காட்டினார். .தனது பஜிரோவை திறந்து எதையோ எடுத்து வருமாறு கூறினார் .

'டே பூனைக்குட்டி (காசு )வருது போல ' என்று எனக்கு பக்கத்தில் நின்ற இன்னொரு வயதானவர் பக்கத்தில் நின்றவரைப்பார்த்து சொன்னதும் எனக்கு கேட்டது .

கடைசியில் வந்தது காசு அல்ல .பனடோல் . வயிறு காய்ந்து பசியில் அழும்போது பனடோல் கொண்டு வந்த அந்த அமைச்சரின் அறிவை என்னவென்று சொல்லுவது ..

இதே அமைச்சர்தான் புத்தளத்துக்கு வெளியே கொழும்பை நோக்கி அகதிகள் வந்து விடக்கூடாது என்பதில் ஜனாதிபதி ஆலோசகராக முன்னின்று உழைத்த முன்னணி யானைப்படையில் இருந்த விசுவாசமான சிப்பாய் .இப்போது இந்த சிப்பாய் காற்றில் அடித்து கட்சி மாறி நாட்டின் தலைவர் புகழ் பாடும் புலவனாக மாறியுள்ளார் .

அடுத்ததாக மலை நாட்டை சேர்ந்த பணக்கார ஊரின் செல்லப்பிள்ளை அமைச்சர் இடம் பெயர்ந்த மக்களுக்காக செய்த சேவை பற்றி கூற ஆசைப்படுகிறேன்

(தொடரும் )

படிப்பகம்